2018 ஜனவரி 11] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

குடும்பத்தாரிடமும் நம்முடைய அரசு அதிகாரிகள் தொடர்பு கொண்டு பேசுகிறார்கள். நல்ல ஆக்கப்பூர்வமான கருத்துகள். தமிழ் மாநிலத்திலிருந்து, இந்தியாவிலுள்ள எந்த மாநிலமாக இருந்தாலும் அங்கு சென்று படிக்கக்கூடிய மாணவர்களுடைய பாதுகாப்பை உறுதிசெய்யக்கூடிய நிலையை நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஆ) அரசு நிகழ்ச்சிக்கான அழைப்பிதழில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் பெயர் விடுபட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் என்னவென்று இன்னும் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர்கள் தயாராக இருக்கமாட்டார்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு நிகழ்ச்சிகள் ஒரு தொகுதியில் நடைபெறுகின்றபோது, அந்தத் தொகுதியினுடைய எம்.எல்.ஏ. வின் பெயரையும் போடுவது வழக்கம்; போட வேண்டும். திருவள்ளூர் தொகுதியில் பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ., திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள். ஆனால், பொன்னேரி எம்.எல்.ஏ.–வின் பெயரை இந்தத் தொகுதியில் போட்டிருக்கிறார்கள்; தொகுதி எம்.எல்.ஏ.–வின் பெயரைப் போடவில்லை. இது நியாயம்தானா என்பதைத்தான் நான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இதுகுறித்து நேற்றையதினமே என்னுடைய கவனத்திற்கு வந்தது. (குறுக்கீடு) உடனடியாக நான் தலைமைச் செயலாளருக்கு அறிவுறுத்தியிருக்கிறேன். சரியான உத்தரவுகளை நான் வழங்கியிருக்கிறேன். மேற்கொண்டு, இந்தமாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்ள நான் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். ஆகவே, இந்தப் பதிலோடு திருப்தியடையுங்கள். (குறுக்கீடு)*

[2018 ஜனவரி 11

திரு. துரைமுருகன்: இந்த நீதி தவறாத நடவடிக்கைக்காகத்தான் நாங்கள் உங்களிடத்தில் சொல்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. (குறுக்கீடுகள்) இல்லை, அனைத்துத் தொகுதிகளிலும் இந்தமாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தலைமைச் செயலாளருக்கு நான் அறிவுரை வழங்கியிருக்கிறேன். (குறுக்கீடு) இனிமேல் அதுமாதிரி இல்லாமல் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு)*

(இ) கன்னியாகுமரி மாவட்டம், வர்த்தகத் துறைமுகம் அமைப்பதில் எழுந்துள்ள பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், நீங்கள் என்னவென்று சொல்லுங்கள்.*

முற்பகல் 11–10

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச சரக்குப் பெட்டக மாற்று முனையம் என்ற ஒரு மெகா துறைமுகத்தை கடந்த ஓராண்டுக்கு முன்பாக மத்திய அரசு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட இனையம் மீனவர் கிராமத்தில் அமைக்கப்படுமென அறிவித்தது. அந்தப் பகுதி மக்களுடைய கடுமையான எதிர்ப்புகளுக்கிடையே தற்போது ஒரு மாத காலத்திற்கு முன்பாக அந்த இடத்தை மாற்றி கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவளம் மற்றும் கீழமணக்குடி மீனவக் கிராமங்களுக்கு இடையே அமைப்பதாக அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு வந்தவுடனேயே அந்தப் பகுதி மக்களிடத்திலே மிகப் பெரிய பதட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மீனவர்களும், மீனவர்கள் அல்லாதவர்களும் இந்தத் துறைமுகம் இங்கே அமைக்கப்படுமானால் தங்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும் என்ற தங்களது அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, மீனவர்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசு அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், கடலுக்கு வெளியே நாங்கள் கட்டுமானப் பணிகளைச் செய்யவில்லை; கடலுக்கு உள்ளேயே கட்டுமானப் பணிகளைச் செய்கின்றோம். அதனால், வீடுகளுக்கும், விளைநிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாது என்ற ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். மீனவர்களுக்கு என்ன அச்சம் ஏற்படுகிறது என்று சொன்னால், கடலுக்கு உள்ளே*